அவர் bail move பண்ணியிருக்கிறார். இருந்தாலும்கூட, காவல் துறை அதிகாரிகள் அவரை விடக்கூடாது என்று வற்புறுத்தி, அவர் வரமுடியாத சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள். ஆகவேதான் இதை நாங்கள் வலியுறுத்துகிறோமே தவிர, அவர் bail-இலே வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். ஆனால் காவல் துறை அதற்கு முழு எதிர்ப்புத் தெரிவித்து, அவரை bail-இலே விடக்கூடாது என்று கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அதைப்போல, அங்கேயிருக்கிற, நீதிமன்றத்திலே இருக்கிற அரசு வழக்கறிஞரும் அதையே வலியுறுத்திக்கொண்டிருக்கிற காரணத்தால், அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, அமர்கிறேன். (குறுக்கீடு)

(ஈ) வினாக்கள்–விடைகள் — உரிய நேரத்திற்குள் முடிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக, கேள்வி நேரம் ஒரு மணி நேரம் நடப்பது வழக்கம். ஆனால் கேள்வி நேரம் அதிகமாக நீடித்துக்கொண்டு போகிறது. கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் இரண்டு வரிகளிலேதான் கேட்க வேண்டும். ஆனால் அவர்கள் உரை நிகழ்த்துவது போன்று இந்த அவையிலே பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதனாலே நாங்கள் பேசுகின்றபோது 5 நிமிடங்கள், 7 நிமிடங்கள் என்று பேச வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. இனிமேலாவது இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படாமல் எங்களுக்கு ஒவ்வொரு மானியத்திலும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற, 23 நிமிடங்களை நீங்கள் ஒதுக்கித் தர வேண்டும்; கேள்வி நேரத்தை 10-30 மணிக்குள்ளாக முடிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, மணியடித்து உட்கார வைத்துவிடுவோம்! (குறுக்கீடு)

(உ) ஸ்ரீபெரும்புதூர், ஹூண்டாய் நிறுவனத் தொழிலாளர்களை விடுதலை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.